| TNVR130010262023 | சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை<br>முன்னிலை–திரு.ஆர்.சதீஷ், எம்.எல்.,<br>சார்பு நீதிபதி, அருப்புக்கோட்டை<br>2026 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10 ம் நாள் வெள்ளிக்கிழமை<br>**அ.வ.எண்.291/2023** |
|---|---|

1. S. சுப்புலட்சுமி
2. ராமசாமி என்ற T.R.S.விஜய்ராம்
3. T.R.S.பாபு
4. T.R.S. சித்ரா ரமேஷ்
5. T.R.S. கார்த்திகேயன் ... வாதிகள்

/எதிர்/

1. V.R. நாராயணசாமி
2. S. பானுமதி
3. V.R. ராஜேந்திரன்
4. S. கௌசல்யா
5. G. சீத்தம்மாள்
6. R. குருவம்மாள்
7. அருப்புக்கோட்டை ஸ்ரீவிஜயலட்சுமி டெக்ஸ்டைல்ஸ் அதன் பார்ட்னர் R.விஜயா மூலம்
8. வருவாய் வட்டாட்சியர், அருப்புக்கோட்டை
9. சார்பதிவாளர் (பத்திரங்கள் பதிவு) அருப்புக்கோட்டை
10. தமிழ்நாடு அரசுக்காக அரன் விருதுநகர் மாவட்ட ஆட்சித்தலைவர் விருதுநகர் மூலம்
11. அருப்புக்கோட்டை ஸ்ரீவிஜயலட்சுமி டெக்ஸ்டைல் மில்ஸ் (பி) லிமிடெட் அதன் இயக்குநர் மூலம் ... பிரதிவாதிகள்

(வ.வி.எண்.1/2024 மனு 19.08.2024 அன்று தள்ளுபடி செய்து பிறப்பிக்கப்பட்ட உத்தரவுக்கு எதிராக வாதிகளால் தாக்கல் செய்யப்பட்ட சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை சி.ஆர்.பி.(எம்.டி.)எண்.3276/2024 மற்றும் சி.எம்.பி.(எம்.டி.)எண்.18914/2024 மேல்முறையீட்டு மனுவில் 17.03.2025 அன்று பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்படி 11 ம் பிரதிவாதி அவசியமான கட்சிக்காரராக சேர்க்கப்பட்டுள்ளார்)

(பிராது வ.வி.எண்.2/2025 மனுவில் 21.07.2025 அன்று பிறப்பிக்கப்பட்ட உத்தரவுப்படி சீர்திருத்தம் செய்யப்பட்டது)

இவ்வழக்கானது இந்நீதின்றம் முன்பாக இறுதியான விசாரணைக்காக

10.04.2026 அன்று வந்தபோது வாதிகள்தரப்பில் வழக்கறிஞர் திரு.R.திருமுருகன் அவர்கள் ஆஜரான நிலையிலும், 1 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திருமதி.T.ரமாமகேஸ்வரி அவர்கள் ஆஜரான நிலையிலும், 7ம் பிரதிவாதி தோன்றாத் தரப்பினராகியுள்ள நிலையிலும், 8 முதல் 10 பிரதிவாதிகள் தரப்பில் அரசு வழக்கறிஞர் ஆஜராகியுள்ள நிலையிலும், 11ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.A.சுவாதீஸ்வரன் அவர்கள் ஆஜராகியுள்ள நிலையிலும், இருதரப்பும் கேட்கப்பட்டும், ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டும் இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

<u>தீர்ப்புரை</u>

1. இந்த வழக்கானது

(i) தாவா சொத்து வாதிகளுக்கு தனித்து பாத்தியப்பட்டது என விளம்புகை செய்யக்கோரியும், அதன் தொடர்ச்சியாக தாவா சொத்தை வாதிகள் அமைதியாக அனுபவம் செய்து வருவதற்கு 1 முதல் 7 மற்றும் 11 பிரதிவாதிகளோ அவர் வகையாட்களோ எவ்வகையிலும் இடையூறு செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பிறப்பிக்கக்கோரியும்,

(ii) தாவா சொத்தைப் பொறுத்து 1 முதல் 4 பிரதிவாதிகளின் தாத்தாவும், 5,6 பிரதிவாதிகளின் தந்தையுமான லேட்.வீ.வீரப்ப நாயக்கர் 7ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்துள்ள 29.09.1986ம் தேதியிட்ட அருப்புக்கோட்டை சார்பதிவாளர் அலுவலக 1760/1986 நிர் கிரைய ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கதில்லை என விளம்புகை செய்யக்கோரியும் மற்றும் செலவுத் தொகை கோரியும் வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. <u>பிராதின் சுருக்கம்:–</u>

வாதிகளின் குடும்பத்திற்கு பூர்வீக பாத்தியப்பட்ட தாவா சொத்து உள்ளிட்ட வேறு சில விவசாய சொத்துக்களை பொறுத்து மட்டும் 2 முதல் 5 வாதிகளின் தந்தையான லேட். டி.ஆர்.சுப்பாராஜா 1வது பார்ட்டியாகவும், அப்போது மைனர்களாக இருந்த 2, 3, 5 வாதிகளுக்கு கார்டியன் என்ற நிலையில் அவர்களது தாயாரான 1ம் வாதி 2வது பார்ட்டியாகவும் இருந்து 14.02.1970 தேதியிட்ட அருப்புக்கோட்டை சார்பதிவாளர் அலுவலக 462/1970 எண் கொண்ட பகுதி பாகப்பிரிவினை பத்திரம் மூலம் பாகம்

செய்து கொண்டதில் தாவா சொத்து 'ஏ' செட்யூல் 11 வது லக்கமாக காட்டப்பட்டு 2 முதல் 5 வாதிகளின் தந்தையான லேட்.டி.ஆர்.சுப்பாராஜ் பாகத்துக்கு ஒதுக்கப்பட்டு அவரது அனுபவத்தில் இருந்து வந்தது. தாவா சொத்தை மேற்படி லேட். டி.ஆர்.சுப்பாராஜ் பெயரில் 943 நிர் பட்டாவில் தாக்கலாகி அனுபவம் செய்து வந்தார்.

இந்நிலையில் டி.ஆர்.சுப்பாராஜ் கடந்த 14.04.1986 ம் தேதியன்று இறந்துவிட்டார். ஷையாருக்கு மனைவியான 1 ம் வாதியும் மக்களான 2 முதல் 5 வாதிகளும் மட்டுமே வாரிசுகளாவார்கள். மேற்படி லேட்.டி.ஆர்.சுப்பாராஜின் மறைவிற்குப்பின் தாவா சொத்தை வாரிசு அடிப்படையில் வாதிகள் அடைந்து அனுபவம் செய்து வருகின்றனர்.

இந்நிலையில் கடந்த 20.09.2023 ம் தேதியன்று தாவா சொத்து தங்களுக்கு பாத்தியப்பட்டது எனக்கூறி 7 ம் பிரதிவாதியின் ஆட்கள் தாவா சொத்தில் அத்துமீறி நுழைந்து பிளாட் கற்கள் ஊன்ற முயன்றதை வாதிகள் மிகுந்த பிரயாசையின் பேரில் தடுத்து நிறுத்திவிட்டனர். இருப்பினும் தாவா சொத்தை பிளாட் போடுவதற்கும் 7 ம் பிரதிவாதி தீவிர முயற்சிகள் செய்து வருகிறார். இதனால் குழப்பமடைந்த வாதிகள் தாவா சொத்துக்கு கடந்த 25.09.2023 ம் தேதி 9 ம் பிரதிவாதியின் அலுவலகத்தில் வில்லங்க சான்றிதழ் பெற்று பார்த்தபோது தாவா சொத்துக்கு எந்தவகையிலும் சம்பந்தமே இல்லாத அருப்புக்கோட்டை டவுண் வடுகர்கோட்டையை சேர்ந்த ஜெயம்புலி வீரப்ப நாயக்கர் மகன் லேட்.வீ.வீரப்ப நாயக்கர் என்பவர் பெயரில் அருப்புக்கோட்டையில் இருக்கும் ஸ்ரீ விஜயலட்சுமி டெக்ஸ்டைல்ஸுக்காக அதன் பார்ட்னரான 7 ம் பிரதிவாதிக்கு 29.09.1986 ம் தேதியிட்ட அருப்புக்கோட்டை சார்பதிவாளர் அலுவலக 1760/1986 நிர் கிரைய ஆவணம் மூலம் பதிவு கிரையம் செய்து கொடுத்திருப்பதும், அதனடிப்படையில் 23.05.2023 ம் தேதியன்று 8 ம் பிரதிவாதியான அருப்புக்கோட்டை வருவாய் வட்டாட்சியர் அவர்களால் 7 ம் பிரதிவாதி பெயருக்கு பட்டா பெயர் மாற்றம் செய்யப்பட்டிருப்பதும் 25.09.2023 ம் தேதி வாதிகளுக்கு தெரிய வந்தது. டி. ஆர். சுப்பாராஜ் பெயரில் இருந்த 943 நிர் பட்டாவை வீ.வீரப்ப நாயக்கர் எழுதிக்கொடுத்த கிரைய ஆவணத்தின் அடிப்படையில் 8 ம் பிரதிவாதியான வருவாய் வட்டாட்சியர் 7 ம் பிரதிவாதியின் பெயருக்கு பட்டா மாறுதல் செய்திருப்பது சட்டப்படி ஏற்றுக்கொள்ளத்தக்கதில்லை. ஷை ஜெயம்புலி வீரப்பநாயக்கர் மகன் வீ.வீரப்ப நாயக்கருக்கு தாவா சொத்தில் எந்தக் காலத்திலும் பாத்தியமோ, அனுபவமோ

கிடையாது. தாவா சொத்தை கிரையம் செய்து கொடுக்க மேற்படி ஜெயம்புலி வீரப்ப நாயக்கர் மகன் வீ.வீரப்ப நாயக்கருக்கு யாதொரு உரிமையும் கிடையாது. ஷை மோசடியான கிரைய ஆவணம் பதிவு செய்யப்பட்ட தேதியில் தாவா சொத்து டி.ஆர்.சுப்பாராஜ் பெயரில் பட்டா எண் 943 ல் தாக்கலாகி வருகிறது என்பது நன்கு தெரிந்தே அதனை மறைத்து மோசடியாக கிரையம் பதிவு செய்யப்பட்டுள்ளது. தாவா சொத்து இன்றுவரை வாதிகளின் தனித்த அனுபவத்திலேயே இருந்து வருகிறது. ஷை கிரைய ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கதில்லை. ஷை ஜெயம்புலி வீரப்ப நாயக்கர் மகன் வீ.வீரப்ப நாயக்கர் கடந்த 23.12.1990 ம் தேதி இறந்துவிட்டார். அவருக்கு பேச்சியம்மாள் என்பவர் முதல் மனைவியாவார். அவர் அதற்கும் முன்பே இறந்துவிட்டார். இவர்களுக்கு வி.ராமசாமி நாயக்கர் மட்டுமே வாரிசாவார். அவரும் கடந்த சில வருடங்களுக்கு முன்பு இறந்து விட்டார். இறந்துபோன ராமசாமிநாயக்கருக்கு அவரது மக்களான 1 முதல் 4 பிரதிவாதிகள் மட்டுமே வாரிசுகள் ஆவார்கள். லேட்.வீ.வீரப்பநாயக்கருக்கு கிருஷ்ணம்மாள் இரண்டாவது மனைவி ஆவார். கிருஷ்ணம்மாள் ஆகிய இளைய தாரத்தின் மகள்களான 5,6 பிரதிவாதிகளும் மட்டுமே வாரிசுகளாக இருந்து வருகின்றனர்.

1 முதல் 7 பிரதிவாதிகள் ஆள்பலமும் அதிகார பலமும் மிக்கவர்கள் ஆவார்கள். சட்டத்தை சிறிதும் மதியாதவர்கள் ஆவார்கள். அவர்களின் அக்கிரம செயல்களை நீதிமன்றம்மூலமே தடுத்து நிறுத்த முடியும். எனவே தாவா சொத்து வாதிகளுக்கு பாத்தியப்பட்டது என விளம்புகை செய்யக்கோரியும், தாவா சொத்தைப் பொறுத்து 1 முதல் 4 பிரதிவாதிகளின் தாத்தாவும், 5,6 பிரதிவாதிகளின் தந்தையுமான ஜெயம்புலி வீரப்பநாயக்கர் மகன் லேட்.வீ.வீரப்ப நாயக்கர் 7 ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்துள்ள 29.09.1986 ம் தேதியிட்ட அருப்புக்கோட்டை சார்பதிவாளர் அலுவலக 1760/1986 நிர் கிரைய ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கதில்லை என விளம்புகை செய்யக்கோரியும் வாதிகளால் இவ்வழக்கு தாக்கல்.

**3.** 1 மற்றும் 2 முதல் 4 மற்றும் 5,6 பிரதிவாதிகள் தரப்பில் பிராதுப்படி தீர்ப்பு செய்ய யாதொரு ஆட்சேபணையும் இல்லை என தனித்தனியாக குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4. <u>8, 10 பிரதிவாதிகள் தரப்பு எதிர்வழக்குரையின் சுருக்கம்:-</u>

வாதிகள் பிராதில் வெளிப்படையாக ஒப்புக்கொண்டுள்ள சங்கதிகள் தவிர மற்ற விசயங்கள் யாவும் அப்பட்டமான பொய்யாகும். வாதிகள் பிராதில் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தையும் வாதிகளே நிரூபிக்க கடமைப்பட்டுள்ளார்கள். பிரதிவாதிகளின் வருவாய் ஆவணங்களின்படி தாவா சொத்திற்குரிய பட்டாவானது ரா.சுப்பாராஜ் பெயரில் 943 நிர் பட்டாவில் தாக்கலாகி வந்தது என்பது ஒப்புக்கொள்ளப்படுகிறது. அதன்பின்னிட்டு 7ம் பிரதிவாதி பெயருக்கு அவர்ளது 29.09.1986ம் தேதியிட்ட கிரைய ஆவணத்தின்படி மேற்படி பட்டாவானது 7ம் பிரதிவாதி விஜயா என்பவர் பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டது. தற்பொழுது மேற்படி 7ம் பிரதிவாதி 29.09.1986ம் தேதியிட்ட கிரைய ஆவணத்தின்படி விஜயா என்ற பெயரை நீக்கிவிட்டு ஸ்ரீவிஜயலட்சுமி டெக்ஸ்டைல்ஸ் என்று பட்டா மாறுதல் செய்ய கோரியதன் அடிப்படையில் கடந்த 28.05.2023ம்தேதி தாவா சொத்திற்குரிய பட்டாவில் இருந்து வந்த விஜயா என்ற பெயரை நீக்கிவிட்டு ஸ்ரீவிஜயலட்சுமி டெக்ஸ்டைல்ஸ் என்று திருத்தம் செய்து மாற்றம் செய்யப்பட்டுள்ளது. தாவா சொத்தினை பொறுத்து பட்டா தவறுதலாக மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்று கூறி பட்டாவில் திருத்தம் செய்ய வேண்டும் என்று வாதிகள் தரப்பில் எந்த ஒரு ஆவண வாயிலாக விண்ணப்பம் அளிக்க கிடையாது. எனவே நீதிமன்ற தீர்ப்பின்படி தாவா சொத்தை பொறுத்து நடவடிக்கை மேற்கொள்ள இந்த பிரதிவாதிகள் தயாராக உள்ளார்கள். இந்த பிரதிவாதிகளுக்கு எந்த ஒரு முன் அறிவிப்பும் இன்றி வழக்கில் தரப்பினர்களாக சேர்த்தும், அரசு அலுவலர்களாகிய இந்த பிரதிவாதிகளின் பணி நேரத்தை வீணடிக்கும் வகையில் பிரதிவாதிகளை வழக்கில் தரப்பினராக சேர்த்திருக்கும் வாதிகளின் வழக்கை பிரதிவாதிகளின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்து தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை பிறப்பிக்க வேண்டும்.

5. <u>9ம் பிரதிவாதி தரப்பு எதிர்வழக்குரையின் சுருக்கம்:-</u>

வாதிகள் பிராதில் வெளிப்படையாக ஒப்புக்கொண்டுள்ள சங்கதிகள் தவிர மற்ற விசயங்கள் யாவும் அப்பட்டமான பொய்யாகும். வாதிகள் பிராதில் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தையும் வாதிகளே நிரூபிக்க கடமைப்பட்டுள்ளார்கள். பிரதிவாதியின் அலுவலக வில்லங்க குறிப்புகளில் வாதிகளின் குடும்ப பாகவிஸ்தி பத்திரமான 14.02.1970ம்

தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரம் பதிவாகியுள்ளது என்பது ஒப்புக்கொள்ளப்படுகிறது. 29.09.1986 ம் தேதியிட்ட கிரைய ஆவணமான 7 ம் பிரதிவாதி பெயரில் உள்ள கிரைய ஆவண காலங்களில் தற்போதுள்ள கணினி பதிவேற்றம் போன்ற உடனே முன்வில்லங்கங்களை சரிபார்க்கும் வசதி வாய்ப்புகள் மற்றும் போதிய பணியாட்கள் இல்லாத காரணங்களால் தவறுதலாக பதிவுகள் மேற்கொண்டிருக்கலாம். அவற்றை தற்பொழுது திருத்தம் செய்வதற்கும் ரத்து செய்வதற்கும் பிரதிவாதியின் உயர் அதிகாரியான மாவட்ட பதிவாளருக்கு அதிகாரம் உள்ளது. அவ்வாறு இந்த பிரதிவாதியின் உயர் அதிகாரியான மாவட்ட பதிவாளரிடம் இந்த வாதிகள் முறையாக மனு அளித்திருந்தால் சரியான விசாரணை செய்து மாவட்ட பதிவாளர் தாவா சொத்தைப் பொறுத்து பதிவுகளின்மீது நடவடிக்கை மேற்கொண்டிருப்பார்கள். அவ்வாறு வாதிகள் ஒரு ஆவணம் வாயிலாக விண்ணப்பம் அளிக்க கிடையாது. தற்பொழுதுவரை தாவா சொத்தைப்பொறுத்து பிரதிவாதியின் அலுவலக வில்லங்க குறிப்பில் 7 ம் பிரதிவாதியின் பெயரான விஜயா என்றே தாக்கலாகி வருகிறது. எனவே நீதிமன்ற தீர்ப்பின்படி தாவா சொத்தைப்பொறுத்து நடவடிக்கை மேற்கொள்ள இந்த பிரதிவாதி தயாராக உள்ளார். இந்த பிரதிவாதிக்கு எந்த ஒரு முன் அறிவிப்பும் இன்றி வழக்கில் தரப்பினராக சேர்த்தும், அரசு அலுவலராகிய இந்த பிரதிவாதியின் பணி நேரத்தை வீணடிக்கும் வகையில் பிரதிவாதிளை வழக்கில் தரப்பினராக சேர்த்திருக்கும் வாதிகளின் வழக்கை பிரதிவாதியின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்து தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை பிறப்பிக்க வேண்டும்.

6. <u>11 ம் பிரதிவாதிதரப்பு எதிர்வழக்குரையின் சுருக்கம்:–</u>

வாதிகளின் வழக்கு சட்டப்படி செல்லத்தக்கதல்ல. வாதிகளின் பிராதில் கூறியுள்ள தாவா சொத்து அமைந்துள்ள இடம் மற்றும் வாதிகளின் உறவுமுறை ஆகிய சங்கதிகள் ஒப்புக்கொள்ளப்படுகிறது. ஆனால் பிராதில் கூறியுள்ளபடி ஆவண எண்.462/1970 ன்படி பகுதி பாகப்பிரிவினை அடிப்படையில் தாவா சொத்து 2 முதல் 5 வாதிகளின் தகப்பனார் மற்றும் 1ம் வாதியின் கணவரான சுப்பாராஜ் என்பவருக்கு பாத்தியப்பட்டது என்று கூறியுள்ள சங்கதிகளைப்பொறுத்து பிரதிவாதிக்கு தெரியாது. தாவா சொத்திற்கு மேற்படி சுப்பாராஜ் பெயரில் பட்டா எண் 943 ஏற்பட்டுள்ளது மறுக்கப்படுகிறது. மேற்படி ஆவணத்தில் இந்த பிரதிவாதி தரப்பினராக இல்லாத

நிலையில் மேற்படி பாகப்பிரிவினை குறித்து இந்த பிரதிவாதிக்கு தெரியாது. வாதிகள் பிராதில் தாவா சொத்து வாதிகளின் பூர்வீக சொத்து எனக் குறிப்பிட்டிருந்தாலும், எவ்வாறு வாதிகள் மற்றும் அவரது தகப்பனார் சுப்பாராஜுக்கு பாத்தியப்பட்டது என்பது குறித்து குறிப்பிடவில்லை. மேலும் பட்டா எண் 493 எதன் அடிப்படையில் சுப்பாராஜ் பெயருக்கு ஏற்பட்டது என்பது குறித்தும் வாதிகள் பிராதில் குறிப்பிடவில்லை. வாதிகள் தாவா சொத்தை பூர்வீக சொத்து என குறிப்பிடும் பட்சத்தில், மேற்படி சொத்தானது இந்த பிரதிவாதியின் தரப்பில் உரிமை படைத்தவர்கள் விருதுநகர் கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட அ.வ.எண்.22/2018 வழக்கில் ஒரு சொத்தாக குறிப்பிடப்பட்டிருக்கும். மேலும் மேற்படி வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ள நிலையில், மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட ஏ.எஸ்.(எம்.டி.)எண்.111/2024 வழக்கு இறுதிநிலை அடைந்துள்ள நிலையில் தாவா சொத்தில் வாதிகள் உரிமை கோருவது சட்டப்படி செல்லத்தக்கதல்ல. வாதிகள் 1970 ம் வருடத்திய பாகப்பிரிவினை ஆவணத்தில் தவறாக இவ்வழக்கு தாவா சொத்திற்குரிய சர்வே எண்ணை காட்டி வழக்கு தாக்கல் செய்துள்ளனர். மேலும் மேற்படி பாகவிஸ்தி ஆவணத்தில் எல்லைகளும், இவ்வழக்கு சொத்திற்குரிய எல்லைகளும் ஒத்துப்போகாத நிலையில் சரியான சொத்தை குறிப்பிடாமல் 1970 ம் வருடத்திய பாகப்பிரிவினை ஆவணத்திற்கு சம்பந்தப்படாத சொத்தின்மேல் உரிமை கோர முடியாது.

வாதிகள் லேட்.சுப்புராஜின் வாரிசுகள் என்ற அடிப்படையில் தாவா சொத்தை அனுபவம் செய்து வருவதாக கூறியுள்ள சங்கதி மறுக்கப்படுகிறது. பிராது பாரா 6 ல் கூறியுள்ள சங்கதிகள் முற்றிலும் மறுக்கப்படுகிறது. 7 ம் பிரதிவாதி நிறுவனமானது கூட்டாண்மை நிறுவனமாக உள்ள நிலையில், பிராதில் கூறியுள்ளபடி 7 ம் பிரதிவாதிக்கு தனித்து தாவா சொத்தை பிளாட்போடுவதற்கு எவ்வித ஆள்பலமும் இல்லை. 7 ம் பிரதிவாதி கூட்டாண்மை நிறுவனமானது ஆதியில் ரேணுகா தேவி, விஜயா, மகாலட்சுமி, டி.ஆர்.ஜெயராமன், டி.ஆர்.தினகரன், டி.ஆர்.வரதராஜன், டி.ஆர்.கண்ணன் மற்றும் லேட்.சுப்புராஜ் ஆகியோர்களை பங்குதாரர்களாக கொண்ட நிறுவனமாக ஆரம்பிக்கப்பட்டு மேற்படி நிறுவனமானது விருதுநகர் நிறுவன பதிவு எண் 36/1984 ல் 23.02.1984 ம் தேதி பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி கூட்டாண்மை நிறுவனமான ஸ்ரீ விஜயலட்சுமி டெக்ஸ்டைல்ஸ் நிறுவனமானது குறைந்த

எண்ணிக்கை நூல் தயாரிப்பதற்காக நடத்தப்பட்டு வந்தது. மேற்படி நிறுவனத்தில் 2 முதல் 5 வாதிகளின் தகப்பனாரான லேட்.சுப்பாராஜ் 31.12.1985ல் ஓய்வு பெற்ற நிலையில் மீதி 7 பங்குதாரர்கள் 01.01.1986 அன்று வேறு கூட்டாண்மை பத்திரத்தை ஏற்படுத்திக்கொண்டனர்.

அவ்வாறு ஏற்படுத்திக்கொண்ட கூட்டாண்மை நிறுவனத்தால் தொழில் வளர்ச்சிக்காக தாவா சொத்தானது அதன் முன்பாத்தியஸ்தரான ஜெயம்புலி வீரப்பநாயக்கர் மகன் வீ.வீரப்ப நாயக்கர் என்பவரிடமிருந்து 29.09.1986ம் தேதியிட்ட கிரையப்பத்திரத்தின் அடிப்படையில் தகுந்த பிரதிபிரயோஜனத்தின் பேரில் கிரையம் செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு கிரையம் பெறும்போது தாவா சொத்தானது அதன் முன்பாத்தியஸ்தராக வீ.வீரப்பநாயக்க நாயக்கரின் பாத்தியத்தில் இருந்தது, லேட்.சுப்பாராஜ் பாத்தியத்தில் இல்லை. மேற்படி கூட்டாண்மை நிறுவன பங்குதாரர்களின் நெருங்கிய உறவினர்களான வாதிகள் 7ம் பிரதிவாதி 20.09.2023ல் இருந்துள்ளதாக தவறாக குறிப்பிட்டு இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள். வழக்கு தாக்கல் செய்யும்போது 7ம் பிரதிவாதி நிறுவனம் இல்லை. மேற்படி நிறுவனமானது அதன் பங்குதாரர்களால் தனியார் லிமிட்டெட் கம்பெனியாக பகுதி 9 கம்பெனிகள் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டு கம்பெனிகள் பதிவின்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது. பின்னர் மேற்படி நிறுவனமானது பொது நிறுவனமாக 01.07.1995 முதல் மாற்றப்பட்டு கம்பெனிகள் பதிவின்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது. பின்னர் பங்குதாரர்கள் மேற்படி பொது நிறுவனத்தை தனியார் நிறுவனமாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுத்து 03.10.2002 முதல் மேற்படி நிறுவனமானது தனியார் நிறுவனமாக்கப்பட்டு கம்பெனிகள் பதிவு சட்டத்தின்கீழ் பதிவு எண்.14569 ன்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் 7ம் பிரதிவாதி நிறுவனமானது 11ம் பிரதிவாதியான அருப்புக்கோட்டை ஸ்ரீ விஜயலட்சுமி டெக்ஸ்டைல்ஸ் மில்ஸ் பிரைவேட் லிமிடெட்டாக மாற்றப்பட்டுள்ளது. எனவே 7ம் பிரதிவாதிக்கு தாவா சொத்தில் எவ்வித உரிமையும் கிடையாது. 11ம் பிரதிவாதி நிறுவனம் நிறுவப்பட்ட காலத்தில் விஜயா ராஜாமணி ஒரு டைரக்டராக சேர்க்கப்பட்டு 12.05.2003 முதல் 11ம் பிரதிவாதி நிறுவனம் இயங்கி வருகிறது. பின்னர் மேற்படி விஜயா ராஜாமணி மேற்படி நிறுவனத்திலிருந்து ராஜினாமா செய்து கொண்ட நிலையில், 11ம் பிரதிவாதி நிறுவனமானது மற்ற

பங்குதாரர்களால் இயக்கப்பட்டு வருகிறது. எனவே 7ம் பிரதிவாதி வழக்கிற்கு அவசிய தரப்பினர் கிடையாது. தாவா சொத்தானது 29.09.1986 தேதியிட்ட கிரையப்பத்திரத்தின் அடிப்படையில் அதன் முன்பாத்தியஸ்தரிடமிருந்து சரியான பிரதிபிரயோஜனத்திற்கு கிரையம் பெறப்பட்டு அதனைத் தொடர்ந்து 8ம் பிரதிவாதியால் பட்டா வழங்கப்பட்டுள்ளது. 11ம் பிரதிவாதி நிறுவனம் குறித்து 1986ம் வருடத்திய பரிவர்த்தனை முதல் அனைத்தும் வாதிகளுக்கு ஏற்கனவே நன்கு தெரிந்திருந்தும் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளனர். வாதிகளின் வழக்கானது காலவரையறை மற்றும் அறிந்தும் வாளாதிருத்தல் தோசத்தால் பாதிக்கப்பட்டுள்ளது. வாதிகள் கூறுவதுபோல் தாவா சொத்தைப் பொறுத்து மோசடியான பரிவர்த்தனை எதுவும் நடைபெறவில்லை. 11ம் பிரதிவாதி நிறுவனம் குறித்த பரிவர்த்தனைகள் சட்டப்படியாக ஏற்படுத்தப்பட்டுள்ள நிலையில் அது வாதிகளை கட்டுப்படுத்தும். லேட்.வீரப்ப நாயக்கருக்கு பேச்சியம்மாள் மற்றும் கிருஷ்ணம்மாள் ஆகிய இரண்டு மனைவிகள் என்பதும் இரண்டாவது மனைவி கிருஷ்ணம்மாளின் மூலம் பிறந்த வாரிசுகள் 5,6 பிரதிவாதிகள் என்றும் கூறியுள்ள சங்கதிகளை வாதிகளே நிரூபிக்க வேண்டும். 8 முதல் 10 பிரதிவாதிகள் வாதிகள் பிராதில் கோரியுள்ளபடி எவ்வித சட்டத்திற்கு புறம்பான நடவடிக்கைகளிலும் ஈடுபடவில்லை. எனவே வாதிகள் பிராதில் கோரியுள்ளபடி விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை மற்றும் ஆவணம் இல்லா நிலையது ஆகிய பரிகாரங்கள் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதல்ல. எனவே வாதிகளின் வழக்கை இந்த பிரதிவாதியின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டும்.

7. <u>11ம் பிரதிவாதி தரப்பு கூடுதல் எதிர்வழக்குரையின் சுருக்கம்:–</u>

வாதிகள் பிராதில் தாவா சொத்தானது தங்களது தகப்பனார் டி.ஆர்.சுப்பாராஜுக்கு பாத்தியப்பட்ட பூர்வீக சொத்து எனவும், அவர் உயிருடன் இருந்த காலத்தில் ஏற்பட்ட 14.02.1970ம் தேதியிட்ட பாகப்பிரிவினைவில் வாதிகள் மைனராக இருந்த காலத்தில் டி.ஆர்.சுப்பாராஜுக்கு கிடைத்தது எனவும் கூறியுள்ளனர். மேலும் வாதிகள் தங்களது பிராதில் தாவா சொத்தானது மேற்படி பாகப்பிரிவினை ஆவணத்தில் 'ஏ' செட்யூல் 11 வது அயிட்டமாக குறிப்பிடப்பட்டு அது தங்களது தகப்பனாருக்கு ஒதுக்கப்பட்டதாக கூறியுள்ளனர். இந்த பிரதிவாதி தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் சாது டி.ராமசாமி நாயக்கரின் பெண் வாரிசுகள் அதாவது வாதிகளின் தகப்பனாரின் சகோதரிகள்

பாகப்பிரிவினை கோரி அ.வ.எண்.22/2018 வழக்கை தாக்கல் செய்துள்ளதாக குறிப்பிட்டுள்ளனர். மேற்படி வழக்கில் மேற்படி டி.ஆர்.சுப்பாராஜின் வாரிசுகள் பிரதிவாதிகளாக வரிசைப்படுத்தப்பட்டுள்ளனர். அதேபோல் லேட்.சாது டி.ராமசாமி நாயக்கருக்கு 2வது மனைவி ஆவுடையம்மாள் மூலம் பிறந்த வாரிசுகளும் பிரதிவாதிகளாக சேர்க்கப்பட்டுள்ளனர். வாதிகள் தாவா சொத்தை பூர்வீக சொத்து எனக் கூறும் நிலையிலும், அ.வ.எண்.22/2018 வழக்கில் தரப்பினராக உள்ள நிலையிலும், மேற்படி வழக்கில் கண்ட லேட்.சாது டிராமசாமியின் அனைத்து வாரிசுகளையும் இவ்வழக்கில் சேர்க்காததால் இவ்வழக்கானது தேவையான தரப்பினரை சேர்க்காத தோசத்தால் பாதிக்கப்பட்டுள்ளது. மேலும் வழக்கானது காலவரையறை தோசத்தாலும் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே வாதிகளின் வழக்கை இந்த பிரதிவாதியின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டும்.

8. <u>வாதிகள் தரப்பு பதில் வழக்குரையின் சுருக்கம்:-</u>

11ம் பிரதிவாதி தரப்பு கூடுதல் எதிர்வழக்குரையில் கண்ட சங்கதிகள் அனைத்தும் மறுக்கப்படுகிறது. 11ம் பிரதிவாதி நிறுவனமானது தனியார் நிறுவனமாக உள்ள நிலையில் தனிப்பட்ட இறந்த நபரின் வாரிசாக 11ம் பிரதிவாதியை கருத இயலாது. மேலும் 11ம் பிரதிவாதி நிறுவனமானது வாதிகளின் குடும்பத்தில் ஒரு நபர் கிடையாது. மேலும் தாவா சொத்தானது விருதுநகர் கூடுதல் மாவட்ட நீதிமன்ற அ.வ.எண்.22/2018 வழக்கு மற்றும் ஏ.எஸ்.(எம்.டி.)எண்.111/2024 வழக்குடன் தொடர்புடைய சொத்து என்பதை 11ம் பிரதிவாதியே நிரூபிக்க வேண்டும். மேற்படி வழக்குகளில் தரப்பினர், வழக்குமூலம், பரிகாரம் ஆகியவை வெவ்வேறானவை. இவ்வழக்கு சொத்தானது மேற்படி வழக்குகளுடன் தொடர்புடையவை அல்ல. உண்மை சங்கதிகளை துலக்காமல், மேற்படி வழக்கு விபரங்கள் குறித்து கூறுவதால் மட்டும் வாதிகளின் பரிகாரம் பாதிக்கப்படாது. எவ்வகையில் பார்த்தாலும் 11ம் பிரதிவாதியின் கோரிக்கையானது செல்லத்தக்கதல்ல. மேலும் 11ம் பிரதிவாதிக்கு வாரிசுரிமை சட்டத்தின் அடிப்படையில் எவ்வித பாத்தியமும் கிடையாது. 11ம் பிரதிவாதி கோரியுள்ள பரிகாரம் நிரூபிக்கும் வகையில் 11ம் பிரதிவாதிதரப்பில் எவ்வித ஆவணமும் தாக்கல் செய்யப்படாத நிலையில், வாதியின் உரிமை குறித்து கேள்வி எழுப்ப 11ம் பிரதிவாதிக்கு எவ்வித அருகதையும் கிடையாது. வாதி குடும்பத்தை சேர்ந்த இதர வாரிசுகள்

தரப்பினராக சேர்க்கவில்லை என்றாலும், தாவா சொத்து குறித்து ஏதாவது ஒரு பங்குரிமைதாரர் விளம்புகை கோரவோ உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரவோ முடியும். தாவா சொத்தானது முழுமையாக வாதிகளுக்கே பாத்தியப்பட்டதாகும். எனவே இறந்துபோன லேட்.டி.ஆர்.சுப்பாராஜின்மூலம் வாரிசு அடிப்படையில் வாதிகளுக்கு தாவா சொத்தில் உரிமை உள்ள நிலையில் லேட்.சாது.டி.ராமசாமி நாயக்கரின் வாரிசுகளை தரப்பினராக சேர்க்காததால் இவ்வழக்கு பாதிக்கப்பட்டுள்ளதாக 11ம் பிரதிவாதி கூறும் கூற்று ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல.

**9.** வாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள வழக்குரை, பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையின் அடிப்படையில் இவ்வழக்கின் தீர்வுக்காக கீழ்க்கண்டவாறு எழுவினாக்கள் வனையப்பட்டுள்ளன.

1. வாதிகள் கோரியுள்ளவாறு விளம்புகை மற்றும் 1 முதல் 7 மற்றும் 11 பிரதிவாதிகளுக்கு எதிராக கோரியுள்ள நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கிடைக்கத்தக்கதா?
2. 29.09.1986 தேதியிட்ட அருப்புக்கோட்டை சார்பதிவக ஆவண எண்.1760/1986 சட்டப்படி செல்லத்தக்கதல்ல என வாதிகள் கோரியுள்ள விளம்புகை பரிகாரம் கிடைக்கத்தக்கதா?
3. வாதிகளின் வழக்கானது தேவையற்ற தரப்பினர் மற்றும் தேவையற்ற சொத்துக்களை சேர்த்துள்ள தோசத்தால் பாதிக்கப்பட்டுள்ளதா?
4. வாதிகளின் வழக்கானது காலவரையறை தோசத்தால் பாதிக்கப்பட்டுள்ளதா?
5. வாதிகளின் வழக்கு அறிந்தும் வாளாதிருத்தல் தோசத்தால் பாதிக்கப்பட்டுள்ளதா?
6. வாதிகளின் வழக்கு பிரிவு 80 சிபிசியின்படி அறிவிப்பு அனுப்பாததால் செல்லத்தக்கதில்லையா?
7. வாதிகளின் வழக்கு சரியாக மதிப்பிடப்பட்டு சரியான நீதிமன்ற கட்டணம் செலுத்தப்பட்டுள்ளதா?
8. வாதிகளுக்கு கிடைக்கக்கூடிய இதர பரிகாரங்கள் என்ன?

<u>கூடுதல் எழுவினா</u>

1. இவ்வழக்கானது தேவையான தரப்பினரை சேர்க்காத தோசத்தால் பாதிக்கப்பட்டுள்ளதா?

**10.** வாதிகள் தரப்பில், 2ம் வாதி ராமசாமி என்ற டி.ஆர்.எஸ்.விஜய்ராம் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.13 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. பிரதிவாதி தரப்பில், 1ம் பிரதிவாதி நிறுவனத்தின் இயக்குநர்களில் ஒருவரான ஜி.ரவி என்பவர் பி.வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, பி.வா.சா.ஆ.1 சான்றாவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**11. <u>எழுவினா 1 முதல் 8 மற்றும் கூடுதல் எழுவினா 1க்களுக்கான தீர்வு:-</u>**

இந்த வழக்கானது தாவா சொத்தைப் பொறுத்து விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் மற்றும் 29.09.1986 தேதியிட்ட அருப்புக்கோட்டை சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.1760/1986 சட்டப்படி செல்லத்தக்கதல்ல என விளம்புகை செய்யக்கோரியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**12.** வாதிகள்தரப்பில், தாவா சொத்து உள்ளிட்ட வேறு சில சொத்துக்கள் 1ம் வாதியின் கணவரும் 2 முதல் 5 வாதிகளின் தகப்பனாரான டி.ஆர்.சுப்பாராஜுக்கு 14.02.1970 தேதியிட்ட ஆவண எண் 462/1970 மூலம் பாகப்பிரிவினையில் ஒதுக்கப்பட்ட சொத்து எனவும், மேற்படி சுப்பாராஜ் இறந்தபின்பு வாதிகள் வாரிசு முறையில் அடைந்து அனுபவம் செய்து வருவதாகவும், இந்நிலையில் தாவா சொத்து தங்களுக்கு பாத்தியப்பட்டது எனக்கூறி 7ம் பிரதிவாதி தாவா சொத்தில் அத்துமீறி நுழைந்து பிளாட் போட முயன்றதை வாதிகள் பிரயாசையின்பேரில் தடுத்து நிறுத்தி விட்டதாகவும், இருப்பினும் 7ம் பிரதிவாதி தாவா சொத்தை பிளாட் போடுவதற்கு தீவிர முயற்சி செய்து வருவதாகவும், இதனால் தாவா சொத்து குறித்து வில்லங்கம் எடுத்து பார்த்தபோது ஜெயம்புலி வீரப்பநாயக்கர் மகன் வீ.வீரப்ப நாயக்கர் என்பவர் 7ம் பிரதிவாதிக்கு 29.09.1986 தேதியிட்ட கிரைய ஆவணம் மூலம் கிரையம் கொடுத்துள்ளதும், அதனை தொடர்ந்து 7ம் பிரதிவாதி பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளதும் வாதிகளுக்கு தெரிய வந்ததாகவும், தாவா சொத்தில் மேற்படி ஜெயம்புலி வீரப்பநாயக்கர் மகன் வீ.வீரப்பநாயக்கருக்கு யாதொரு உரிமையும் கிடையாது எனவும், எனவே தாவா சொத்து குறித்து விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் மற்றும் ஆவணம் இல்லா நிலையது என விளம்புகை பரிகாரமும் கோரப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

**13.** 1 மற்றும் 2 முதல் 4 மற்றும் 5, 6 பிரதிவாதிகள் தரப்பில் பிராதுப்படி தீர்ப்பு செய்ய யாதொரு ஆட்சேபணையும் இல்லை என தனித்தனியாக குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**14.** 8, 10 மற்றும் 9ம் பிரதிவாதிகள் தரப்பில், வாதிகளின் வழக்கை மறுத்து, தாவா சொத்திற்கு முதலில் 7ம் பிரதிவாதி பெயரில் பட்டா ஏற்பட்டு பின்னர் 11ம் பிரதிவாதி பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளதாகவும், தாவா சொத்தினை பொறுத்து பட்டா தவறுதலாக மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்று கூறி பட்டாவில் திருத்தம் செய்ய வேண்டும் என்று வாதிகள் தரப்பில் எந்த ஒரு ஆவணம் வாயிலாகவும் விண்ணப்பம் அளிக்கக்கிடையாது எனவும், எனவே நீதிமன்ற தீர்ப்பின்படி தாவா சொத்தை பொறுத்து நடவடிக்கை மேற்கொள்ள இந்த பிரதிவாதிகள் தயாராக உள்ளதாக கூறப்பட்டுள்ளது.

**15.** 7ம் பிரதிவாதி தோன்றாத் தரப்பினராக உள்ள நிலையில், 11ம் பிரதிவாதி தரப்பில் வாதிகளின் வழக்கை முற்றிலுமாக மறுத்து, தாவா சொத்தானது ஆதியில் வீ.வீரப்ப நாயக்கருக்கு பாத்தியப்பட்டு மேற்படி வீ.வீரப்ப நாயக்கரிடமிருந்து முதலில் 7ம் பிரதிவாதி நிறுவனம் சார்பில் கிரையம் பெறப்பட்டிருந்தாலும், 7ம் பிரதிவாதி நிறுவனமானது கூட்டு நிறுவனமாக உள்ள நிலையில் அதன் கூட்டு பங்குதாரரான விஜயா என்பவர் பெயரில் முதலில் பட்டா ஏற்பட்டு, பின்னர் மேற்படி விஜயா என்பவர் பெயரிலிருந்த பட்டா மேற்படி கூட்டு நிறுவனம் பெயரில் மாற்றப்பட்டுள்ள நிலையில், 7ம் பிரதிவாதி நிறுவனம் இவ்வழக்கிற்கு அவசிய தரப்பினர் கிடையாது எனவும், மேற்படி வீ.வீரப்ப நாயக்கரிடமிருந்து 11ம் பிரதிவாதி நிறுவனத்தின்பேரில் தகுந்த பிரதிபிரயோசனத்தின்பேரில் பெறப்பட்ட கிரையம் சட்டப்படி செல்லத்தக்கது எனவும், தாவா சொத்திற்கும் வாதிகள் கூறும் 1970ம் வருடத்திய பாகப்பிரிவினைக்கும் எவ்வித சம்பந்தமும் கிடையாது எனவும் எனவே வாதிகள் கோரும் பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதல்ல எனவும் கூறப்பட்டுள்ளது.

**16.** இருதரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. வாதிகள்தரப்பில் 2ம் வாதி ராமசாமி என்ற டி.ஆர்.எஸ்.விஜய்ராம் என்பவர் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு வாதிகள்தரப்பு வழக்கு குறித்து சாட்சியமளித்துள்ளார். வாதிகள்தரப்பில், 14.02.1970 தேதியிட்ட பாகவிஸ்தி ஆவணத்தின் நகல் வா.சா.ஆ.1 ஆகவும், டி.ஆர்.சுப்பாராஜ் பெயரில் உள்ள 943 எண் உள்ள பட்டா வா.சா.ஆ.2 ஆகவும்,

டி.ஆர்.சுப்பாராஜின் இறப்புச்சான்றிதழ் வா.சா.ஆ.3 ஆகவும், டி.ஆர்.சுப்பாராஜின் வாரிசு சான்றிதழ் வா.சா.ஆ.4 ஆகவும், 29.09.1986 தேதியிட்ட 7 ம் பிரதிவாதி பெயரில் உள்ள கிரையப்பத்திரத்தின் நகல் வா.சா.ஆ.5 ஆகவும், 7 ம் பிரதிவாதி பெயரில் மாற்றப்பட்டுள்ள தாவா சொத்துக்கான The Town Survey Land Register கணினி நகல் வா.சா.ஆ.6 ஆகவும், 09.11.2023 தேதியிட்ட வில்லங்க சான்றிதழின் நகல் வா.சா.ஆ.7 ஆகவும், 25.09.2023 தேதியிட்ட வில்லங்க சான்றிதழின் நகல் வா.சா.ஆ.8 ஆகவும், 10.11.2023 தேதியிட்ட அரசு மதிப்பீடு வழிகாட்டி கணினி நகல் வா.சா.ஆ.9 ஆகவும், 2 ம் வாதியின் ஆதார் அடையாள அட்டையின் நகல் வா.சா.ஆ.10 ஆகவும், 01.10.1986 தேதியிட்ட கிரைய ஆவணத்தின் சார்பதிவாளர் நகல் வா.சா.ஆ.11 ஆகவும், பட்டா எண் 943 சர்வே எண் 209/1 க்குரிய எஸ்.எல்.ஆர். நகல் வா.சா.ஆ.12 ஆகவும், 09.01.2025 தேதியிட்ட வில்லங்க சான்றிதழ் நகல் வா.சா.ஆ.13 ஆகவும், ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**17.** வாதிகள் தரப்பில் தாவா சொத்தானது டி.ஆர். சுப்பாராஜுக்கு 14.02.1970 தேதியிட்ட பாகப்பிரிவினை ஆவணத்தின்மூலம் பாத்தியப்பட்டு அவர் இறந்தபின்பு வாரிசு அடிப்படையில் வாதிகளுக்கு பாத்தியப்பட்டு, வாதிகள் அனுபவம் செய்து வருவதாக பிராதில் குறிப்பிடப்பட்டு அதை நிரூபிக்கும் வகையில் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.4 வரையிலான ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. மேலும் தாவா சொத்தானது வீ.வீரப்பநாயக்கருக்கு பாத்தியப்பட்டதாக கூறி 7 ம் பிரதிவாதிக்கு மேற்படி வீ.வீரப்ப நாயக்கர் மோசடியாக கிரையம் செய்து, மோசடியாக 7 ம் பிரதிவாதி பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளதாக குறிப்பிட்டு வா.சா.ஆ.5 மற்றும் வா.சா.ஆ.13 வரையிலான ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

**18.** வாதிகள் தரப்பில், தாவா சொத்து டி.ஆர்.சுப்பாராஜுக்கு பாகப்பிரிவினை ஆவணம் மூலம் பாத்தியப்பட்டு அவர் இறந்தபின்பு வாதிகளுக்கு பாத்தியப்பட்டு வாதிகள் அனுபவம் செய்து வருவது குறித்தும், தாவா சொத்திற்கு 7 ம் பிரதிவாதி பெயரில் மோசடியாக கிரைய ஆவணம் மற்றும் பட்டா ஏற்பட்டுள்ளது குறித்தும் வாதிகள் தரப்பில் ஆவணங்கள் தாக்கல் செய்து சாட்சியமும் அளிக்கப்பட்டுள்ளது. வாதிகளின் வழக்கை கடுமையாக மறுத்துள்ள 11 ம் பிரதிவாதி தரப்பில் தாவா சொத்தானது வாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்து கிடையாது எனவும், வாதிகளின் அனுபவத்தில்

இல்லை எனவும், தாவா சொத்தானது 11ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டு 11ம் பிரதிவாதியின் அனுபவம் இருந்து வருவதாக குறிப்பிட்டு வாதிகளின் வழக்கை மறுத்து எதிர்வழக்குரை தாக்கல் செய்திருந்த போதிலும், 11ம் பிரதிவாதி தரப்பில் 11ம் பிரதிவாதி நிறுவனத்தின் இயக்குநர்களில் ஒருவரான ரவி என்பவர் பி.வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டபோது, தனது சாட்சியத்தில் கீழ்க்கண்டவாறு சாட்சியமளித்துள்ளார்.

> "எங்கள் நிறுவனத்தில் வழக்கு சொத்தை பொறுத்து கடந்த 25.03.2026 அன்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதை பி.வா.சா.ஆ.1 ஆக தாக்கல் செய்கிறேன். அந்த தீர்மானத்தின்படி இந்த வழக்கில் வாதியின் கோரிக்கையை ஏற்று வழக்கு சொத்தை பொறுத்து வழக்கில் கோரிய பரிகாரத்தை வழங்குவதில் எங்களுக்கு ஆட்சேபணை இல்லை"

மேலும் பி.வா.சா.1 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில்,

> "…. தாவா சொத்தைப்பொறுத்து இன்று நீதிமன்றத்தில் ஒரு தீர்மானம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வழக்கில் கோரிய பிராதுபடி 01.10.1986 தேதியிட்ட அருப்புக்கோட்டை சார்பதிவாளர் அலுவலகத்தில் 1760/1986 என்று பதிவு செய்யப்பட்ட பதிவு கிரைய ஆவணத்தை ரத்து செய்வதில் எனக்கு எந்தவித ஆட்சேபணையும் இல்லை என்றால் சரிதான். வழக்குபடி தாவா சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டது என்பதிலும் எனக்கு எந்தவித ஆட்சேபணையும் இல்லை என்றால் சரிதான்."

என சாட்சியமளித்துள்ளார்.

மேற்படி பி.வா.சா.1ன் சாட்சியத்தை பரிசீலனை செய்து பார்க்கும்போது, வாதிகளின் வழக்கை பிராதுப்படி தீர்ப்பு செய்ய ஒப்புக் கொண்டுள்ளதாக தெரிய வருகிறது.

**19.** வாதிகள் தரப்பில் வழக்கு சொத்தை பொறுத்து விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் மற்றும் ஆவணம் இல்லா நிலையது என விளம்புகை பரிகாரம் கோரி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, அதனை மறுத்து 11ம் பிரதிவாதிதரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்திருந்தபோதிலும், 11ம் பிரதிவாதி தரப்பில் 11ம் பிரதிவாதி நிறுவன இயக்குநர்களில் ஒருவரை விசாரணை செய்தபோது, வழக்கில் கோரியபடி 01.10.1986 தேதியிட்ட அருப்புக்கோட்டை சார்பதிவாளர்

அலுவலகத்தில் 1760/1986 என்று பதிவு செய்யப்பட்ட பதிவு கிரைய ஆவணத்தை ரத்து செய்வதில் எனக்கு எந்தவித ஆட்சேபணையும் இல்லை எனவும் வழக்குபடி தாவா சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டது என்பதிலும் எனக்கு எந்தவித ஆட்சேபணையும் இல்லை எனவும் சாட்சியமளித்துள்ளதை பார்க்கும்போது, இவ்வழக்கில் பரிசீலனை செய்ய வேறு சங்கதிகள் இல்லை எனவும், வாதிகள் வழக்கில் கோரிய பரிகாரங்கள் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கது என இந்நீதிமன்றம் முடிவு செய்து முடிவு செய்து அவ்வாறே எழுவினா 1 முதல் 8 மற்றும் கூடுதல் எழுவினா 1க்கு தீர்வு காணப்படுகிறது.

**20**. முடிவாக வாதிகளின் வழக்கு அனுமதிக்கப்பட்டு,

(i) தாவா சொத்து வாதிகளுக்கு தனித்து பாத்தியப்பட்டது என விளம்புகை செய்து, அதன் தொடர்ச்சியாக தாவா சொத்தை வாதிகள் அமைதியாக அனுபவம் செய்து வருவதற்கு 1 முதல் 7 மற்றும் 11 பிரதிவாதிகளோ அவர்வகை ஆட்களோ எவ்வகையிலும் இடையூறு செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பிறப்பித்தும்,

(ii) தாவா சொத்தைப் பொறுத்து லேட்.வீ.வீரப்ப நாயக்கர் 7ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்துள்ள 29.09.1986ம் தேதியிட்ட அருப்புக்கோட்டை சார்பதிவாளர் அலுவலக ஆவண எண் 1760/1986 நிர் கிரைய ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கதில்லை என விளம்புகை செய்தும் தீர்ப்பளிக்கப்படுகிறது.

(iii) வழக்கின் தன்மை மற்றும் சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு செலவுத்தொகை இல்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் விரிவாக்கம் செய்து தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் சரிபார்க்கப்பட்டு இன்று 2026ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 10ஆம் நாள் அவையறிய பகரப்பட்டது.

SATHISH Digitally signed by SATHISH

சார்பு நீதிபதி,
அருப்புக்கோட்டை.

<u>வாதிகள் தரப்பு சாட்சிகள் :</u>

வா.சா.1 ராமசாமி (எ) T.R.S..விஜய்ராம்

<u>வாதிகள் தரப்பு சான்றாவணங்கள் :</u>

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1. | 14.02.1970 | பதிவு பாகவிஸ்தி ஆவண எண்.462/1970 ன் சார்பதிவாளர் நகல் |
| வா.சா.ஆ.2. | --- | T.R.சுப்பாராஜ் பெயரில் உள்ள பட்டா எண் 943 க்குரிய எஸ்.எல்.ஆர்.நகல் |
| வா.சா.ஆ.3. | --- | T.R.சுப்பாராஜின் இறப்புச்சான்றிதழ் |
| வா.சா.ஆ.4. | --- | T.R.சுப்பாராஜின் வாரிசு சான்றிதழ் |
| வா.சா.ஆ.5. | 29.09.1986 | கிரைய ஆவண எண்.1760/1986 ன் சார்பதிவாளர் நகல் |
| வா.சா.ஆ.6. | 28.05.2023 | 7 ம் பிரதிவாதி பெயரில் மாற்றப்பட்டுள்ள Extract From the Town Survey Land Register |
| வா.சா.ஆ.7. | 09.11.2023 | வில்லங்க சான்றிதழ் |
| வா.சா.ஆ.8. | 25.09.2023 | வில்லங்க சான்றிதழ் |
| வா.சா.ஆ.9. | 10.11.2023 | அரசு மதிப்பீடு வழிகாட்டி |
| வா.சா.ஆ.10. | --- | வா.சா.1 ன் ஆதார் அட்டையின் நகல் |
| வா.சா.ஆ.11. | 01.10.1986 | கிரைய ஆவண எண்.1769/1986 ன் சார்பதிவாளர் நகல் |
| வா.சா.ஆ.12. | 12.11.2025 | பட்டா எண்.321 ல் சர்வே எண்.207/1 க்கு எஸ்.எல்.ஆர்.காப்பி |
| வா.சா.ஆ.13. | 09.01.2025 | வில்லங்க சான்றிதழ் |

<u>பிரதிவாதி தரப்பு சாட்சிகள் :</u>

பி.வா.சா.1. ரவி

<u>பிரதிவாதி தரப்பு சான்றாவணங்கள் :</u>

பி.வா.சா.ஆ.1.25.03.2026 11 ம் பிரதிவாதி நிறுவன தீர்மானம்

SATHISH Digitally signed by SATHISH

சார்பு நீதிபதி,
அருப்புக்கோட்டை.

சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை
அசல் வழக்கு எண்.291/2023
சீரான/வரைவு தீர்ப்புரை
நாள் : 10.04.2026